★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 3உ புதன் (15 2 56) ★ ★ வெளியூர்: மாசி 4உ வியாழன் (16—2—56) [இதழ் 209

விசாலாந்திரம்—பஞ்சாப் பிரச்னை

பிப். 20-ல் அரசாங்க முடிவு

மாகாண திருத்தங்கள்பற்றி முடிவு கூறாத இருக்கின்ற பஞ்சாப்—விசாலாந்திரம் பிரச்னைகளில், இந்தியப் பேரரசின் முடிவு பிப். 20-ந் தேதி அறிவிக்கப்படுமாம்.

மாகாண சீரமைப்புக் குழுவின் சிபாரிசுப்படி தெலிங்கானாவை தனி அமைப்பாக ஆக்குவதா, அல்லது அப்பகுதியை உள்ளடக்கிய விசாலாந்திரத்தை அமைப்பதா என்பது, காங்கிரஸ் காரியக் குழுவால் ஆராயப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

'பகத்சிங் வேண்டுமா? ம. பொ. சி. வேண்டுமா?'

பண்டித நேருவுக்கு அண்ணா அறைகூவல்

'ஜனநாயகம் தோற்றால் அடுத்த கட்டம் என்ன?'

'அனுமதிக்கும் வரையில் அமைதி வழியே நடப்போம்'

'ஆத்திரத்தால் சர்க்கார் பலாத்காரத்தை வருந்தி அழைக்க வேண்டாம்'

சென்னை கூட்டத்தில் போர்முழக்கம்

"அசாம் மாநிலத்திற்கும்—பர்மாவிற்கும் இடையில் சிறு பள்ளத்தாக்குகளாயும், குன்றுகளாயும் பரவிக் கிடப்பதுதான் நாக நாடு; அந்த மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் அமைந்துள்ள நாகர்கள், இன்று 'தனிநாடு' கோருகிறார்கள்; நாகர் தலைவர்கள், நாக நாட்டு மக்களுக்கு விடுதலை உணர்ச்சியை ஊட்டி பெரும் கிளர்ச்சிகளை நடத்திவருகிறார்கள்; அவர்களைப் பற்றிய செய்திகள் நமக்கு எப்போதாவது—ஆறு மாதத்திற்கு ஒருமுறை இங்குள்ள பத்திரிகைகளில் ஆறாம் பக்கத்திலோ, பத்தாம் பக்கத்திலோ எங்கோ ஒரு மூலையில் சிறு அளவில் தரப்படுகிறது.

"நாக நாட்டுவாசிகள் மலைவாசிகள்; அவர்கள் இன்றையத் தினம் நம்மைப்போல கூட்டம் போட்டு மாநாடு கூட்டி, தங்கள் கோரிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கவில்லை; இரண்டாம் யுத்த முடிவிலே, பர்மாவைவிட்டு வெளியேறியபோது ஜப்பானியர்கள், கூட்டம் கூட்டமாக வீசிவிட்டுப்போன ஆயுதங்கள் அவர்களிடத்திலே சிக்கியுள்ளன; அந்த ஆயுதங்களை வைத்துக்கொண்டு நாகர்கள், 'நாகநாடு' சுதந்திர நாடாகிவிட்டது—தனி நாடாகிவிட்டது' என்று பிரகடனப்படுத்திவிட்டார்கள்.

"'நாகர்களின் சுதந்திரப் பிரகடனம் உலகமெல்லாம் பரவி விட்டால் என்ன செய்வது?' என்பதால், நாகர்கள் வெளியிட்ட புத்தகங்களை, சில நாட்களுக்கு முன் அசாம சர்க்கார் பறிமுதல் செய்திருக்கிறார்கள்.

"நாகர்களுக்கு யாரிடத்திலேனும் விரோதம் உண்டானால், அந்த விரோதத்தைத் தீர்த்துக்கொள்ள, வகைபார்த்துவிட்டு வாளாவிருந்துவிட மாட்டார்கள்; 'அடிக்கிறேன் — அடிக்கிறேன்' என்று சொல்லிவிட்டு, அடிக்காமலேயே போய்விடுகிற 'வீர'த்தனமும் பேசமாட்டார்கள்; விரோதம் கொண்டவருடைய தலையைச் சீவி, தங்கள் தலைவரிடத்தில் தந்து பின்பு அந்த மண்டை ஓட்டை வெற்றிமாலையாகப் போட்டுக் கொள்பவர்கள்; அத்தகையவர்கள்தான், தங்கள் நாடு சுதந்திர நாடாகிவிட்டதாகப் பிரகடனப்படுத்தி விட்டிருக்கிறார்கள்.

"நாமோ இந்த நாட்டில், மனுச் செய்து கொள்கிறோம்—வேண்டுகோள் விடுக்கிறோம்—தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பிவைக்கிறோம் — ரொம்பக் கோபம் வந்தால் எச்சரிக்கிறோம்!

"அந்த நிலையிலிருக்கும் இந்த நாட்டு மக்களைப் பார்த்துத்தான் பண்டித நேரு ஆத்திரமாகப் பேசியிருக்கிறார் நேரு ஏன் அப்படிப் பேசுகிறார் என்பதை நம்மாலே புரிந்துகொள்ள முடிகிறது. நேருவின் பேச்சு, அவரது வீரத்தையா காட்டுகிறது?

"கடைந்தெடுத்த கோழை ஒருவன்—வெறிநாய் வீதியில் வரக்கண்டால் அஞ்சுபவன் போலீசாரைக் கண்டால் பயப்படுபவன்—வலிவு படைத்தவனைக் கண்டால் நடுங்குபவன்—வம்புக்கு வருபவனைப் பார்த்தால் ஒதுங்கிப் போகிறவன்—கோழையான கையாலாகாத கனவான் ஒருவன், வீட்டிற்கு வந்ததும், அவன் வருகைக்காக ஆவலுடன் காத்திருக்கும் மனைவியிடம் தன் 'வீரத்தனத்'தைக் காட்டுவான்.

"கடசி வேறுபாடுகளை மறந்து ஆண்களும்—பெண்களும், வயோதிகர்களும — வாலிபர்களும் க் இந்தியாவிலிருந்து

கோவாவிற்குச் சென்ற நிராயுபாணிகளான சத்தியாக்கிரகிகளை போர்ச்சுகல் சர்க்கார் சுட்டுக்கொன்றார்கள்; அந்தக்கொடிய அடக்குமுறை கண்டு ஆத்திரப்படாத நேரு, நாட்டு மக்களைப் பார்த்து மிரட்டுகிறார்—ஆத்திரமாகப் பேசுகிறார் என்றால், வெளியில் கடைந்தெடுத்த கோழையாகவும், வீட்டிற்குள் வீரத்தைக் காட்டுபவனாகவுமிருக்கும் கையாலாகாத கணவனுக்கும்—பண்டித நேருவுக்கும உபமானம் பொருத்தமானதா இல்லையா என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

"எந்த இடத்தில் வீரம் காட்ட வேண்டுமோ, எந்த இடத்தில் சூரத்தனம் பேசவேண்டுமோ அந்த இடத்தில் பேசாது, நாட்டு மக்களைப் பார்த்து, 'இராணுவம் இருக்கிறது; படைபலம் இருக்கிறது' என்று பண்டித நேரு பேசுகிறார் என்றால் என்ன பொருள் அதற்கு?

"எந்த அமிர்தசரசிலே பண்டிதர், நம்மையெல்லாம், 'அடக்குவேன்—ஒடுக்குவேன்' என்று பேசி தீர்மானம் நிறைவேற்றினாரோ, அதே அமிர்தசரசிலே மற்றொன்றும் பேசியிருக்கிறார்; 'கோவாவில், போர்ச்சுகீசியர்கள் எத்தனைதான் தங்களுக்கு ஆத்திரமூட்டினாலும் நாங்கள் நிதானமிழக்கமாட்டோம்—சமாதான வழிகளையே நாடுவோம்'—என்று!

"வீரம் காட்டவேண்டிய போர்ச்சுகீசியர்களிடத்தில் சமாதானம் பேசிவிட்டு, தேவதேவனைப்போல் தன்னைத் தொழுது நிற்கும் மக்களிடத்தில் போலீசாரையும், இராணுவத்தையும் காட்டுகிறார் நேரு! இதற்கு வீரம் என்று பெயர்?

"'போலீஸ் பட்டாளமும், இராணுவ வீரர்களும் வெறும் இயந்திரங்களல்ல; அவர்களுக்கும் மூளையும், இதயமும் இருக்கத்தான் செய்கிறது; அவர்களுக்கும நாம் சொல்லுவது நன்கு புரியும் என்பதை சர்க்கார் மறந்துவிட வேண்டாம்,' என்று எனக்கு முன் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்.

"சர்க்கார் எதிர்பார்க்கிறபடி—போலீசையும், இராணுவத்தையும் நம்மீது ஏவி, நம்மை அவர்கள் தடிகொண்டு தாக்கி மண்டையைப் பிளந்தாலும், நாம் தாங்கிக்கொள்ள வேண்டும்; துப்பாக்கியை நீட்டிச் சுட்டு வீழ்த்துவதானாலும் நாம் மார்பைக் காட்டவேண்டும்; சர்க்கார்—நேரு பண்டிதர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டுவதினாலேயே நமது போராட்டம் நின்றுவிடாது.

"போராட்டம் நிற்காது என்றால், போராட்ட முறை மாறும்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

★★★-★★★★-★★★★★★★★★★★

'ஹர்த்தால்'

(பொது வேலை நிறுத்தம்)

காந்தியார் விளக்கம்

"அரசாங்கத்தின் செயலைக் கடுமையாகக் கண்டிக்க 'ஹர்த்தாலே' சரியான முறையாகும். தேசிய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க, மாபெரும் பொதுக்கூட்டம் கனைவிடச் சக்திவாய்ந்த மார்க்கம் இது."

—1919-ல் 'யங் இந்தியா'வில்

★★★★★★★-★★★★★-★★★★★

நீர்வளிக் குண்டு

சோதனையை நிறுத்தத் தயார்!

மாஸ்கோ, பிப் 14—

"அணுதக் குறைப்புப் பிரச்னையில் முக்கிய அம்ச[illegible] சம்பந்தமாக ஒப்பந்தம் ஏற்ப[illegible]னால், ரஷ்யா நீர்வளிக் குண்[illegible] சோதனையை நிறுத்திவைக்க [illegible]திக்கும்"

என்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் கிருஷ்சேவ் கூறியுள்ளார்.

ஐ. நா.-வில் சீனு!

சீனமக்கள் குடியரசை ஐ. நா. வில் சேர்த்துக் கொள்ளுவதற்கு உடன்பாடான எண்ணம், ஐ. நா. வில் பெருமளவுக்குக் காணப்படுகிறதாம்!

தொழிற் சங்கத் தலைவர் உண்ணாவிரதம்

புகலூர் பிப், 13—

இன்று காலை 6-மணி முதல் புகலூர்சர்க்கரை ஆலைத் தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் ஆர். உமாநாத் என்பார், ஆலையின் நுழைவுவாயில் அருகில் அமைக்கப்பட்டுள்ள குடிசையிலிருந்து கொண்டு உண்ணா நோன்பு மேற்கொண்டுள்ளார்.

தொழிலாளர்களின் ஆண்டு வருமானத்தில் 25 சதவிகிதத் தொகையை போனசாக அளிக்க வேண்டுமெனவும், கூபரோகத்தால் பாதிக்கப்பட்டுள்ள இரண்டு தொழிலாளர்களை ஆலை நிர்வாகத்தின் பொறுப்பில் மருத்துவமனையில் சேர்க்க வேண்டுமெனவும் கோரியே உண்ணா நோன்பு ஆரம்பித்தன்னதாக அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

அண்மையில் நடந்த சமரசப் பேச்சு வார்த்தையில் 'உதவி லேபர் கமிஷனர்' அவர்கள், 25 சதவிகிதம் தரவேண்டுமென சிபாரிசு செய்ததாகவும். ஆலை நிர்வாகம் அதனை ஏற்க மறுத்து விட்டதாகவும் தொழிற் சங்கத்தார் வெளியிட்டுள்ள ஒரு அறிவிப்பில் காணப்படுகிறது. (ந கி.)

மராட்டிய இன எழுச்சியின் எதிரொலி

இராணுவத்தில்சேர குஜராத்திகளுக்கு அழைப்பு

அகமதாபாத், பிப். 12—

"கூர்கை முன்மாதிரியாகக்கொண்டு குஜராத்தியர்கள் உலகத்தைக் காண இராணுவத்தில் சேர வேண்டும்."

"இராணுவத்தில் சேருவதினால் அவர்களுக்கு ஏற்படக் கூடிய நல்ல விளைவுடன் வருமான வரி, சொத்து வரி, மரண வரி முதலிய தொத்து வேதனைகளிலிருந்தும் குஜராத்தியர்கள் விடுபடுவர்."

"'ஏன் அதிகமான குஜராத்திகளை இராணுவத்தில் சேர்க்கக் கூடாது'? என்று, பம்பாய் முதலமைச்சர் மொரார்ஜி தேசாய் என்னை அடிக்கடி கேட்பதுண்டு; 'அதை ஒரு வாழ்க்கையாக மதித்து குஜராத்தியர்கள் இராணுவத்தில் சேர ஆர்வம் கொள்ளுவதில்லை' என்று நான் பதிலளித்தேன்."

—இவ்வாறு 'தென் பகுதி இராணுவத் தலைவர் திம்மையா அவர்கள் குஜராத் கல்லூரி ஆண்டு விழாவில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்

அவர் மேலும் கூறியதாவது:—

"கூர்கில் 40,000 மக்கள்தான் இருந்தபோதிலும் 330 அதிகாரிகள் இராணுவத்தில் இருந்துவருகின்றனர்; ஆனால் குஜராத்தில் 110 இலட்சம் மக்கள் இருந்தபோதிலும் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே இராணுவத்தில் இருக்கின்றனர்.

இராணுவ வாழ்வு இழிவானது அல்ல; நான் மீண்டும் வாழ்க்கையைத் தொடங்குவதாக இருந்தால், மறுமுறையும் இராணுவத்தில் தான் சேருவேன்."

தரணி ஆண்டோரே! உறங்கியது போதும்!

பிப். 20—சர்வகட்சி ஹர்த்தால் :

'இஷ்டப்பட்டால் (திராவிட) கழக மெம்பர்களும் பங்கு பெறலாம்'

"இஷ்டப்பட்டால் (திராவிட) கழக மெம்பர்கள் பிப். 20-ந் தேதி சர்வகட்சி ஹர்த்தாலில் கலந்துகொள்ளலாம்."

—இவ்வாறு, 5—2—56 அன்று திருச்சி தேவர் ஹாலில் நடைபெற்ற திராவிடர் கழக மாணவர் மாநாட்டில் பேசுகையில் பெரியார் ஈ. வெ. ரா. குறிப்பிட்டிருக்கிறார். —'தினமணி' : 8-2-56

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 15—2—56 செவ்வாய்

அமிர்தசரஸ் அவியல்!

அமிர்தசரஸ் மாநாடு, காங்கிரஸ் வரலாற்றில் ஒரு சோகக் கட்டம்.

பலம் பொருந்திய ஏகாதிபத்தியத்தை, மக்கள் குரலாக இருந்து எதிர்த்த காலத்திலும், மக்களை அடக்கி ஒடுக்கி ஆளும் இவ்வேழாண்டு காலத்திலும் நடைபெற்ற மாநாடுகள் எந்த ஒன்றிலும், இப்பொழுது பெற்ற அதிர்ச்சியையும் ஆயாசத்தையும்போல, காங்கிரஸ் பெற்றதே கிடையாது.

காங்கிரஸ் மாநாடு கூட்டப்படுகின்ற இடம் பெரும் நகரமானாலும், சிற்றூரானாலும் அங்கு மக்கள் இலட்சக்கணக்கில் திரண்டிருப்பர். பகட்டும் படாடோபமும் மலிந்துகிடக்கும்.

அது...டு காங்கிரஸ் மேலிடத்தா... முதலிடத்தார், இரண்டா...த்தார், வரிசைக் கிரம... ஒவ்வொரு இடத்தாரும் ...ரித்துப் போவர். சாதித்தவைகளை, முடிக்க எண்ணி இருப்பவைகளைச் சிங்கமென கர்ஜிப்பர், தலைவர்கள்! பெருத்த ஆரவாரம் செய்து, அதை வரவேற்கும்—அங்குக் கூடியுள்ள மக்கள் வெள்ளம்!

இத்தேய்ந்தப் பாதையிலிருந்து, அமிர்தசரஸ் காங்கிரஸ் மாநாடு வழிவிலகிச் சென்றுவிட்டிருக்கிறது. அலகாபாத் பண்டிதர் முதல் மேலூர் கக்கன் ஈருக போதனை புரிந்தார்கள். ஆனால், வழக்கம்போல் அவைகளைக் கேட்டு கைதட்டி ஆரவாரஞ் செய்யத்தான் நன்மக்கள் இல்லாமற் போய்விட்டார்கள்.

இந்தியப் பேரரசின் பிரதமர் இருந்தார்; இந்தியத் தரணியை இஷ்டப்படி ஆட்டிவரும் உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த உள்நாட்டமைச்சர் இருந்தார்; தொழுது வாழும் கூட்டு அமைச்சர்கள் கொலு வீற்றிருந்தார்கள்; மாகாண அமைச்சர்கள் எனும் நாப்பறைகள் அனைத்தும் அலங்கார மேடையில் பதுமைகளாக அமர்ந்திருந்தன; மற்றவர், காங்கிரசின் கற்றூண்கள்—மரத்தூண்கள் எனப் பாராட்டப்பட்டவர்கள்.

மாநாட்டு மேடையில் மக்கள் குரலெழுப்பும் குணவான்கள் இல்லை—மக்கள் சார்பில் குறைகளைச் சுட்டிக்காட்டும நல்லவர்கள் இல்லை—ஆளவந்தார்களின் தவறை இடித்துக் கூறி திருத்த முயலும் துணிவுடைய நெஞ்சினர் இல்லை.

நேருவே கூறிவிட்டார்-பண்டித பந்துவே பேசிவிட்டார்—ஆசாதே அறிவித்துவிட்டார்—நாட்டிலுள்ள பல்வேறு மக்களின் சிக்கலான பிரச்சினைகள் அனைத்துக்கும், அவைகளில் தகுந்த பரிகாரம் மண்டிக் கிடக்கிறது' எனக் கூறிடும் கட்டியக்காரர்கள் கொலுவீற்றிருந்தனர்—அங்கு, மேடையில்!

பம்பாய் கலவரத்தின்போது, மராட்டியர்கள் செய்ததாகச் சொல்லப்படும் நாச வேலைகளைக் கண்டிக்கவும், புத்தா போதனையைக் கூறவும், அசோகனின் அகிம்சா வழியைப் பாராட்டவும்தான், ஆங்கு ஆட்கள் — இல்லை — தலைவர்கள் இருந்தனரே அல்லாது, காந்தியார் பெயரால் ஆட்சிபீடமேறியுள்ளோர், அசோக சக்கரம் பொறித்தக் கொடியின்கீழ் கொலுவீற்றிருப்போர், புத்தரைப் பற்றி முணுமுணுத்துக் கொண்டு இருப்போர், பம்பாய் வீதிகளில மக்களை விரட்டி விரட்டி அடித்துத் துரத்தி துரத்தி வேட்டையாடி சுட்டு வீழ்த்திய கொடுஞ் செயல் பற்றி ஏன் என்று வாய்திறக்கும் நீதிமான் - வல்லமை படைத்தோன் அம் மேடையில் அமர்ந்திருக்கவில்லை; அதுபற்றி மூச்சு விடக்கூடிய ஒருவர் கூட அக்கூட்டத்தில் இடம் பெற்றிருக்கவில்லை.

காங்கிரஸ் மாநாடு கூடுகிற இடத்தில், வேறு கட்சியினர் மாநாடு கூட்டுவது என்பது கனவிலும் கருதக் கூடாத காரியமாகும். காங்கிரஸ் வரலாற்றில் அத்தகு சம்பவம் என்றும் நிகழ்ந்ததில்லை.

அமிர்தசரஸ், அத்தனிச் சிறப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

அகாலி தளத்தினர் மாநாடு கூடினர்; சீக்கியர் அங்கு இலட்சக்கணக்கில் திரண்டனர்; அவர்கள் தலைவர் மாஸ்டர் தாராசிங், சீக்கிய மொழிவழி மாநிலக் கோரிக்கையை வலியுறுத்திப் பேசியுள்ளார்.

அவர், அகாலியர் மாநாட்டில் பேசிய பேச்சு, ஒலிபெருக்கி மூலம் காங்கிரஸ் மாநாட்டில் குழம்பிய உள்ளத்துடனும், கவலைதோய்ந்த முகத்துடனும், மிரண்ட பார்வையுடனும் வீற்றிருந்த இந்தியப் பிரதமர் நேருவின் காதுகளில் நாராசம்போல் பாய்ந்தது. இந்தியப் பிரதமர்தான் நேரு! இருந்தால் என்ன? தம பல்லை சீக்கியர் பிடித்துப் பார்க்கக் காட்டிக்கொண்டுதான் இருக்க வேண்டியதாக இருக்கிறது—நேருவிற்கு அதை விலக்க அல்லது தடுக்கத் துணிவில்லை!

சீக்கியர் பெருங்குடி மக்கள் மட்டுமா இந்தியப் பிரதமரை பல்லைப் பிடித்துப் பார்த்திருக்கிறார்கள்? இந்த மக்கள்கூடத்தான், மாநாடு கூடி பண்டிதரை அச்சுறுத்தி இருக்கிறார்கள்!

இந்தியப் பிரதமர் நேரு வாழ்க்கையின் புகழ் மிக்க முதற் கட்டத்திற்கு அமிர்தசரஸ் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. இனி இரண்டாவது கட்டம் — சோகம் நிரம்பிய சரிவுக் கட்டம் துவங்குகிறது.

அமிர்தசரஸ் — பண்டித நேருவின் வீழ்ச்சிப் படலத்தின் துவக்கம். எவ்வளவோ திடுக்கிடக்கூடிய விசித்திர சம்பவங்கள் அப்படலத்தில் இடம் பெறும்.

809 கோடி ரூபாய் செலவிடப்பட்டதாம்!

இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து, இதுவரையில் பாசன மின்சாரத் திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 809 கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சியில் இத்தகைய திட்டங்களுக்குச் செலவழிக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் அது நான்கு மடங்காகும்.

புதிய சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்தப்படுமாம்!

அடுத்த ஐந்தாண்டுகளில், இந்தியாவில் சர்க்கரை உற்பத்தியை 25 இலட்சம் டன்னுகப் பெருக்க உத்தேசித்திருக்கிறது; தற்போது நாட்டில் 161 ஆலைகளின் மொத்த உற்பத்தி சக்தி 16 இலட்சம் டன்னுகும். புதிதாக 39 ஆலைகளை ஏற்படுத்துவதற்கும், ஏற்கனவேயுள்ள 44 ஆலைகளை பரவலாக்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

இராணுவத்திற்குக் கைத்தறித் துணி?

கைத்தறித் துணி உற்பத்திக்கு ஊக்கமளிப்பதற்காக இராணுவத்தில் புதிதாகச் சேருபவர்களுக்கு முதல் தடவையாக அளிக்கப்படும்போது கைத்தறித் துப்பட்டிகளையே வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது; பிரதேசப் படை மக்கள் சகாய சேனை, என் சி. சி. ஆகியோருக்கும் கைத்தறித் துப்பட்டிகளையே வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இளம் கலைஞர்களுக்கு உபகாரச் சம்பளமாம்!

இந்திய சர்க்கார், இளம் கலைஞர்களின் கலாச்சாரப் பயிற்சிக்காக இந்த ஆண்டில் மொத்தம் 28 உபகாரச் சம்பளங்களை வழங்குவார்கள். 1953-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட திட்டமொன்றின் கீழ், கலாச்சாரப் பயிற்சிக்காக இதுவரை மொத்தம் 72 பேருக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

கைகழுவினர்!

டச்சு- இந்தோனேஷிய யூனியன் உறவை இந்தோனேஷியா கைவிட்டு விட்டதாகத் தெரிகிறது.

இந்தோனேஷியா தன்னிச்சையாக—ஒரு தலைப்பட்சமாக இந்தத் தீர்ப்பை மேற்கொண்டதாகத் தெரிகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் புதிதாக சுமார் 2000 தந்தி காரியாலயங்களையும், 1 300 பொது உபயோக டெலிபோன்களையும திறந்துவைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்டோருக்குக் காங்கிரஸ் கதவடைப்பு

மாநாடு உணவு விடுதியில் நுழைய அனுமதி மறுப்பு

அமிர்தசரஸ் காங்கிரஸ் சம்பவம்

ஷகீத் நகர், பிப். 11—

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் சீக்கியர்கள் தங்களது குறைகளைக் காங்கிரஸ் தலைவர்களுக்குத் தெரிவிக்க காங்கிரஸ் மாநாட்டில் திறந்த வெளிப் பந்தலில் பட்டினியோடு குளிரில் நடுங்கிக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தனராம்.

பந்தலில் பட்டினியுடன் உட்கார்ந்திருந்த தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்கள், குழந்தைகள் எல்லாம், பந்தலிலிருந்த பாய்களை எடுத்துப் போர்த்திக் கொண்டனராம்!

சில காங்கிரஸ் தலைவர்கள் வந்து தங்களின் குறைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்கிறவரை, அவர்கள் பந்தலை விட்டு வெளியேற மறுத்துவிட்டிருக்கின்றனர்.

கிராமப்புறங்களில் சீக்கியர்கள் தங்களை மிக மோசமாக நடத்துகிறார்கள் என்று அவர்களில் ஒருவர் கூறினாராம்!

காங்கிரஸ் கொடிகளை ஏற்றுக்கொண்டு அவர்கள் இன்று நகரில் ஊர்வலம் வந்திருக்கின்றனர்.

பந்தலில் உட்கார்ந்திருந்த இந்த சீக்கியர்கள் ஏதும் உண்ணவில்லை; இலவச உணவளிக்கும் அகாலிகள் உணவு விடுதிகளுக்கோ, மகா பஞ்சாபிகளின் பந்தலுக்கோ செல்ல அவர்கள் மறுத்துவிட்டனராம்

"அவர்கள் காங்கிரஸ் உணவு விடுதிக்குச் செல்ல விரும்பினர்; ஆனால், அங்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை,"

என்று, அதிகாரி ஒருவர் கூறியதாகத் தெரிய வருகிறது.

எண்ணிக்கை தருகின்றனர்

சென்ற ஆண்டு அக்டோபர் மாத இறுதிவரையில் மொத்தம் 6,30 37,579 பேர் க்ஷயரோக பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்; அவர்களில் மொத்தம் 2 12,95,541 பேருக்கு பி. சி. ஜி. தடை மருந்து குத்தப்பட்டது. பி. சி. ஜி. மருந்து குத்தும் இயக்கம் 1948-ல் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டு 1951-ல் பெரிய அளவில் பரவலாக்கப்பட்டது.

ரூ. 39 கோடி அந்நிய செலாவணி மிச்சமாம்!

1951-ம் ஆண்டிலிருந்து அம்மோனியம் சல்பேட் உரம் உற்பத்தி செய்துவரும் சிந்திரி ரசாயன உர உற்பத்திச்சாலை, நாட்டுக்கு ரூ. 33 கோடி மதிப்புக்கு அன்னிய நாட்டுச் செலாவணியை மிச்சப்படுத்தியிருக்கிறது.

இன்ஷ்யூரன்ஸ் தேசியமயமானதின் எதிரொலி!

கனடா சர்க்கார் எதிர்ப்பு?

லண்டன், பிப். 13—

இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களை சர்க்கார் உடைமையாக்குவதென்கிற இந்திய சர்க்கார் தீர்மானத்தைக் குறித்து கனடா சர்க்கார் ஆட்சேபம் தெரிவித்திருப்பதாக செய்தி பரவியுள்ளது என்று கூறப்படுகிறது

பல கனடா இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்கள் இந்தியாவில் நடத்தி வரும் தொழிலைப் பறிமுதல் செய்வதாகுமென்று கனடா சர்க்கார் கருதுகிறதாம்.

தென்னாட்டில் மக்கள் சபைக் கூட்டமாம்!

காங்கிரஸ் உறுப்பினர் தீர்மானம்

புதுடில்லி, பிப். 12—

'தென்னாட்டில் ஒரு தகுதியான இடத்தில் மக்கள் சபையின் கூட்டம் ஆண்டுக்கு ஒருமுறையேனும் நடத்தப்பட வேண்டும்; தென்னாட்டிற்கும் — வடநாட்டிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பினை உருவாக்குவதற்கு இது அவசியம்,"

என்று கூறும் தீர்மானம் ஒன்று, மக்கள் சபை வரும் பிப்ரவரி 15-ந் தேதியன்று கூடும்போது, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது

"தென்னாட்டு மொழிகளை வடவர் கற்றுக்கொள்வதற்கு வசதி செய்யும் வகையில், அகில இந்திய வானொலி நிலையத்தினர், தென்னாட்டு மொழிப்பாடங்களை ஒலி பரப்பச் செய்யவேண்டும்,"

என்று மற்றொரு தீர்மானமும் விவாதத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு தீர்மானங்களையும் மத்தியப்பிரதேசக் காங்கிரசின் உறுப்பினர் கூப் சந்த் சோதியா என்பார் கொண்டுவந்திருக்கிறாராம்.

குஷ்டரோகக் கட்டுப்பாடு

ரூ. 665 இலட்சம் ஒதுக்கப்படும்

குஷ்டரோகக் கட்டுப்பாடுக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் ரூ 665 இலட்சம் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது இந்தச் செலவில பாதியை மத்திய சர்க்காரும், பாக்கியை மாநில சர்க்கார்களும் ஏற்பார்கள்.

புயல் நிவாரண நிதி

18-ம் பிரங்கிப்படை அறிவு நூல் படிப்பக தோழர்கள் முயற்சி

தமிழகப் புயல், வெள்ள நிவாரண நிதிக்கு. கிருஷ்ணகிரி 18-ம் பீரங்கிப்படை அறிவு நூல் படிப்பகத்தாரால் ரூ. 50 திரட்டப்பட்டு 10—2—56-ல் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

—தி மு க. தலைமை நிலையம்.

* * *

தமிழகத்தில் ஏற்பட்ட புயல், வெள்ள நிவாரணத்திற்கு பம்பாய் பரேல் பகுதியிலுள்ள சிகரெட் கம்பெனி தொழிலாளர்கள் ரூ 158 நிதி திரட்டி சென்னை மாநில மத்திய புயல் நிவாரண நிதிக் குழுவிற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

* * *

திருச்சி, சேலம், ஈரோடு மற்றுமுள்ள ஊர்களிலிருந்து மைசூர் மாநிலத்தில செயற்கைக் கற்கள், பொன், வெள்ளி நகைகள் சுற்றுப் பயண வாணிபம் செய்யும தோழர்களின் சார்பில் ரூ. 300 பெறுமானமுள்ள கைத்தறி வேட்டிகளைப் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அனுப்பிவைத்தனர்.

விழிப்பீர்! வீறுகொண்டு எழுவீர்!

டில்லி தீர்ப்பு: நாடெங்கும் கண்டனம்

பிப். 20—பொது வேலைநிறுத்தத்திற்குப் பேராதரவு

கழகக் கிளைகளின் நடவடிக்கைகள்

தேவிகுளம்—பீர்மேடு வட்டங்கள் தமிழகத்துடன் இணைக்கப்படாததைக் கண்டித்தும், 'தட்சிணப் பிரதேச'த் திட்டத்தை எதிர்த்தும் தீர்மானங்கள் நிறைவேற்றியிருப்பதுடன், சர்வ கட்சிக் கூட்டணியினர் அறிவித்துள்ள பிப். 20—பொது வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு அளித்தும், நாடெங்குமுள்ள தி. மு. கழகத் தோழர்கள், செயற்குழு மற்றும் பொதுக் கூட்டங்களில் முடிவுகள் மேற்கொண்டுள்ளனர். நடவடிக்கைகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.

பண்ணைபுரம்

பண்ணைபுரம் தி. மு. கழகச் சார்பில், நேருவின் தீர்ப்பைக் கண்டித்து, தி. மு. சாவடி முன்பு, தோழர் மு. இராசன் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே எஸ் சந்தானம், கே. எ. கலையழகன், கிருட்டிணமூர்த்தி முத்துக்கிருட்டிணன் ஆகியோர் 20—2—56 பொது வேலை நிறுத்தம் குறித்து விளக்கிப் பேசினர்.

தாத்தையங்கார்பேட்டை

7—2—56-ல் தாத்தையங்கார் பேட்டை தி மு. கழக செயற்குழுக்கூட்டம், தோழர் எம் எஸ். என் இராசன் தலைமையில் நடைபெற்றபோது சர்வகட்சிக் குழுவின்படி 20—2—56-ல் ஊர்வலமும், வேலை நிறுத்தமும் செய்வதெனவும், ஊர்வலத்தில் இவ்வூரில் உள்ள சகல கட்சியினரும் கலந்துகொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கீழப்பாவூர் :

8—2—56ல் நடைபெற்ற கீழப்பாவூர் தி மு. கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், சர்வ கட்சியினை முறைகளை ஆதரிப்பதும், திரு—கொச்சி தமிழ்ப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்துடன் இணைக்கக் கோரியும், 'தட்சிணப் பிரதேச'த் திட்டத்தை எதிர்த்தும், பிப் 20—பொதுவேலை நிறுத்தத்திற்கு ஆவன செய்யவும், அதற்கென குழு ஒன்று அமைத்தும் முடிவுகள் செய்யப்பட்டன

சென்னை 26-வது வட்டம்

10—2—56 இரவு 8½ மணிக்கு, சென்னை பெரியமெட் தி. மு. கழகப் பணிமனையில் சர்வகட்சி கூட்டணி முக்கியஸ்தர்களின் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றபோது, பிப். 18-ந் தேதிக்குள் பொதுக் கூட்டம் நடத்துவதெனவும், இவ்வட்ட பொதுமக்களுக்கும், தொழிலாளர்களுக்கும், கடைக்காரர்களுக்கும், மாணவ—மாணவிகளுக்கும் 'பிப். 20-ல் நடைபெறும் பொது வேலைநிறுத்தம் ஏன்? எதற்கு?' என்பதை விளக்கும் துண்டு விளம்பரத் தாள்கள் மூலம் தெரிவிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது

கொட்டாம்பட்டி

12—2—56 மாலை 4 மணிக்கு மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி தி மு க. உறுப்பினர்கள் கூட்டத்தில், தேவிகுளம்-பீர்மேடு பற்றிய நேருவின் அநியாயத் தீர்ப்பைக் கண்டித்தும், 'தட்சிண பிரதேச' அமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தும், சென்னை மாநிலம்' என்பதை மாற்றி 'தமிழ் நாடு' எனப் பெயர் வைக்கக் கோரியும், பிப். 20 பொதுவேலை நிறுத்தத்திற்கு ஆதரவும் தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நாகலாபுரம் :

12—2—56-ல், நாகலாபுரம் தி மு கழகக் கிளை நிர்வாக உறுப்பினர்கள் கூட்டம், தோழர் மா. அழகர்சாமி தலைமையில் நடைபெற்றபோது கடந்த மாத வரவு-செலவுகளை ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், பிப் 20—பொது வேலை நிறுத்தம் பற்றி இதர கட்சிகளுடன் கலந்துசெய்வதெனத் தீர்மானிக்கப்பட்டு, தோழர் சாலமோன் தாயார் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

கும்முடிபூண்டி :

11—2—56 மாலை 7 மணிக்கு, கும்முடிபூண்டி தி. மு. கழகச் செயற் குழு செயலாளர் தலைமையில் நடைபெற்றபோது, கூட்டணி அமைக்க முடிவு செய்தும், 19—2—56-ல் பொதுக்கூட்டம் நடத்துவதெனவும், பிப். 20-ல் பொது வேலைநிறுத்தம் செய்வதெனவும், தோழர் மாரிமுத்து (ரெட்டி) தலைமையில் குழு அமைக்கவும் முடிவு செய்தது.

கழக 4-வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதெனவும், கழக வரவு-செலவு கணக்குகளை தணிக்கைக் குழுவிற்கு விட்டு சரிபார்ப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது

புதுவை :

12—2—56 காலை 10 மணிக்கு தோழர் பாரதிதாசன் இல்லத்தில், தி. மு கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, தமிழரசுக் கழகம், திராவிடர் கழகம், திராவிடர் முன்னணி, வியாபாரச் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்களும், பிரமுகர்களும், வியாபாரிகளும் ஒன்றுகூடி, பிப் 20—பொதுவேலை நிறுத்தம்—கடையடைப்பு ஆகியவை பற்றிச் சென்னை சர்வகட்சிக் கூட்டணியின் முடிவைப் புதுவையிலும் நடைமுறைக்குக்கொண்டுவர சர்வ கட்சிக் கூட்டணி ஒன்று அமைத்தனர். தோழர் பாரதிதாசன் அவர்களைத் தலைவராகக் கொண்ட செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

ஆம்பூர் (வ.ஆ.)

12—2—56 மாலை 10 மணிக்கு, ஆம்பூர் திருவள்ளுவர் கழக செயற்குழுக் கூட்டத்தில் சென்னை மாகாணத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடுமாறு கோரியும், திரு—கொச்சி தமிழ்ப் பகுதிகளை தாய்த் தமிழகத்துடன் சேர்க்கக் கோரியும், 'தட்சிணப் பிரதேச' யோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாதவரம் - சென்னை :

மாதவரம் தோல் பதனிடும் தொழிலாளர் சங்க நிர்வாகக் கமிட்டி கூட்டம் தோழர் எம். கே கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றபோது, தேவிகுளம்—பீர்மேடு போன்ற தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்துடன் இணைக்க வேண்டுமெனவும், சென்னை இராஜ்யத்திற்கு 'தமிழ் நாடு' எனப் பெயர் வைக்க வேண்டுமென்றும், 'தட்சிணப் பிரதேச' அமைப்பு முயற்சியை வன்மையாகக் கண்டித்தும், பிப். 20—பொது வேலைநிறுத்தத்திற்குசர்வகட்சியினரின்முயற்சிக்கு ஆதரவளிக்கும் முறையில் இங்குள்ள எல்லா தோல் ஷாப்புகளிலும் வேலை நிறுத்தம் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

'தீச்சுடர்' நிதி—சிறப்புக் கூட்டம்

பொதுச் செயலாளர் தலைமையில் முன்னணி வீரர்கள் சொற்பொழிவு

சென்னை, பிப். 14—

தோழர் சி. பி. சிற்றரசு அவர்களின் 'தீச்சுடர்' வளர்ச்சி நிதிக்காக, சென்னை கோகலே மண்டபத்தில், 12—2—56 காலை 10 மணியளவில் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

நன்கொடையாக எட்டணா, நாலணா செலுத்திக் கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

தோழர் இளம்பரிதி முன்மொழிய, தோழர் இராமசாமி வழிமொழிய, கூட்டத்திற்கு பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கி, 'தீச்சுடர் நிதிக்காக கூட்டம் நடத்துவதின் நோக்கத்தைத் தெளிவாக விளக்கினர்.

அடுத்து தோழர் மு கருணாநிதி அவர்கள், இயக்கத்துடன் தொடர்புகொண்ட நாளிலிருந்து தோழர் சி. பி. சிற்றரசு ஆற்றி வந்துள்ள பணிகளைக் குறிப்பிட்டு, 'தீச்சுடர்' வளர வேண்டியதின் அவசியத்தைவற்புறுத்திப்பேசினர்

அடுத்து தோழர் சி.பி. சிற்றரசு அவர்கள் தனது இயக்க அனுபவங்கள் சிலவற்றை எடுத்துக் கூறி நாட்டு நிலைகளையும் விளக்கினர்.

அடுத்து, தோழர் டி. கே சீனிவாசன் அவர்கள் அரியதோர் கருத்துரை வழங்கினர்.

இறுதியாக தலைமை தாங்கிய பொதுச்செயலாளர் இரா நெடுஞ்செழியன் அவர்கள், இறந்தகால—நிகழ்கால நிலைகளைச் சுருக்கமாக விளக்கி, எதிர்காலத்தை நிர்ணயிக்க, கடந்தகால அனுபவம் பயன்படவேண்டுமென்பதை அழகாய் விளக்கினார்கள்.

நன்கொடையாக வசூலான தொகையில் செலவு போக ரூ. 682—7—6 தோழர் சி பி சிற்றரசு அவர்களிடம் வழங்கப்பட்டது.

நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. (ச. கி.)

குருடர்களுக்குப் பார்வை !

7,00,000 பவுன் திட்டத்தில் ஆராய்ச்சியாம் !

ஆசியா, ஆப்பிரிக்கா நாடுகளில் பரவியுள்ள கண் நோயை ஆராய்ந்து பரிகாரம் காண 7,00,000 பவுன் செலவுத் திட்டமொன்றை பிரிட்டிஷ் சர்க்கார் தயாரித்திருக்கிறதாம் !

கண் பொங்கி, 'பீளை' ஏற்பட்டு இரணம் பரவும் நோய் இது; இதனால் கண்கள் குருடாகிவிடுவதும் உண்டு. உலக மக்களில் 100-க்கு 15 பேர்களுக்கு இந்த நோய் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

எவ்வளவு தெரியுமா?

ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டின் மூலம் ரூ 3,22,882-ம், கண்காட்சி மூலம் ரூ 3,02,739-ம் வசூலாயிற்றாம் !

மீர்சாகிப்பேட்டையில் டி. கே. சீனிவாசன்

கழக ஆண்டு விழாவில் கொள்கை விளக்கம்

சென்னை, பிப். 14—

சென்னை மீர்சாகிப்பேட்டை 43-வது வட்ட தி. மு. கழக ஐந்தாவது ஆண்டு விழா, 11—2—56 அன்று மாலை சிறப்புற நடைபெற்றது.

தோழர் கன்னியப்பன் முன்மொழிய தோழர் எழுமலை வழிமொழிய தோழர் மு அரங்கநாதன் கூட்டத்திற்குத் தலைமை வகித்து சிறிதுநேரம் பேசினர்.

அடுத்து தோழர் கே டி. எஸ். மணி, மொழி வழி மாநிலம் அமைப்பது குறித்தும், அதை ஒட்டிய பிரச்சினைகளைக் குறித்தும் பேசினர்.

பின்னர் தோழர் முகவை - ஆர். எஸ். பாண்டியன் சிறிது நேரம் பேசியதும் தோழர் டி. கே. சீனிவாசன் தேவிகுளம் - பீர்மேடு வட்டங்கள் தமிழகத்துடன் சேர வேண்டிய அவசியம் குறித்தும், மொழி வழியாக மாநிலங்கள் அமைய வேண்டியதின் அவசியம் குறித்தும், டெல்லி சர்க்காரின் அநீதி குறித்தும் அரியதோர் உரை [illegible]நிகழ்த்தினர்.

இதற்கு முன்பாக, வட்டக் கிளைச் செயலாளர் தோழர் மு. புரட்சிமணி தீர்மானங்கள் இரண்டு கொண்டு வந்தார்.

கூட்டத்தினர் தங்களின் கையொலி மூலம் அவற்றை நிறைவேற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்திற்கு ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். (ச. கி.)

அமைதி திரும்பியபின்- 'புண்' ஆறியபின் !

'தவறு' என்று தெரிந்தால் திருத்திக் கொள்ளலாமாம் !

பண்டிதர் தரும் வியாக்கியானம்

ஷாகித் நகர், பிப். 12—

"மாநிலப் புது அமைப்பை ஒட்டி பலாத்காரமான கிளர்ச்சிகளால் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள 'புண்'களை ஆற்ற வேண்டுவது இந்தியர் ஒவ்வொருவரின் கடமையாகும்

"அர்த்தமில்லாத மோதல்களினால் பலரது உள்ளத்தில் உருவாகியிருக்கும் பகை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அத்தனை சீக்கிரம் ஒழிக்கப்பட்டாகவேண்டும்.

"ஏதாவது ஒரு மாநில அமைப்பு குறித்த முடிவில் தவறு நிகழ்ந்திருக்கிறது என்று காணப்பட்டால் அதனைப் பின்னர் திருத்திக் கொள்ளலாம்; முடிவை மாற்றிக் கொள்ளலாம்; ஆனால், நல்லெண்ணமும், கிளர்ச்சி நிகழ்ந்த இடங்களில் அமைதியும் ஏற்பட்டு, இந்தப் பகை ஒழிந்தாலன்றி இதைச் செய்வது சாத்தியமானதல்ல"

என்று பண்டித நேரு, காங்கிரசின் மாநில புது அமைப்பு குறித்த தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்,

★

காங்கிரஸ் தீர்மானம் !

"மொழியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மாநிலங்கள் அமைக்க முடியாது,"

என்று காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

அது மட்டுமின்றி, பெரிய இருமொழி மாநிலங்கள் அமைவதை வரவேற்பதாயும், அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்தது என்றும் தீர்மானம் கூறுகிறது.

இந்தத் தீர்மானத்தை மௌலானா ஆசாத் முன்மொழிந்து, 'ஒரு காலத்தில் காங்கிரஸ் மொழிவழி மாநிலம் கோரியது உண்மை என்றும், ஆனால் இன்று அன்றிருந்த சூழ்நிலைகள் இல்லை என்பதால், மொழிவழியாக மாநில அமைப்புத் தேவை இல்லை' என்றும் வம்பளந்திருக்கிறார்.

அதனை ஆதரித்து, பண்டித பந்த், பண்டித நேரு இருவரும் பேசியிருக்கின்றனர். அவர்கள், 'மொழிவழி, மாநிலம் கூடாது' என்பதை வற்புறுத்தி, தங்களது ஏகாதிபத்திய உள் நோக்கத்தை வெட்ட வெளிச்சமாக்கியிருக்கின்றனர்.

மொழிவழிக் கோரிக்கையை

ஒத்திவைக்க வேண்டுமாம் !

ஷஹீத்நகர், பிப். 18—

"இந்தியாவில் புனர் நிர்மாண வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், மொழிவழி அரசு பற்றிய தகராறுகளைக் குறைந்தது இன்னும் பத்தாண்டுகளுக்கேனும் முடிந்தால் ஒத்திப்போடவேண்டும்,"

என்று, பிரதமர் பண்டித நேரு, காங்கிரஸ் மந்திரியர் [illegible] கூட்டம் ஒன்றில் பேசுகையில் [illegible]பிட்டிருக்கிறாராம்.

சோஷலிஸ்டு [illegible] தலைவர் கைது

போபால் சட்டசபையில் எதிர்க் கட்சித் தலைவரான குவாப் சந்திராமத் என்பாரை போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய வகையில் பொதுக் கூட்டம் ஒன்றில் அவர் பேசியதுதான் நடவடிக்கைக்குக் காரணமாம்.

சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த அவர், கட்சியின் ஒரு வட்டாரக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக போபால் வந்தாராம்.

4500 தொழிலாளர்கள் வேலை இழந்தனர் !

அத்துக்குடி, பிப். 12—

அத்துக்குடியிலுள்ள மதுரை (ஹார்வி) மில் நிர்வாகத்தினர் நேற்று மாலை முதல் 'கதவடைப்பு' செய்துள்ளதால், சுமார் 4,500 தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனராம்.

சட்டவிரோதமாக உள்ளிருந்தவாறே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததாகவும், நிபந்தனையின்றி வேலைக்குத் திரும்புவதாக எழுத்து மூலம் உத்திரவாதம் அளிக்கும் வரையில் மில் திறக்கப்படமாட்டாது எனவும் மில் நிர்வாகத்தினரின் அறிவிப்பு கூறுகிறது.

ஒரு பிரிவுத் தொழிலாளருக்கு இதுநாள்வரை — கடந்த பல ஆண்டுகளாகக் 'காக்கி' உடைகள் தரப்பட்டுவந்ததாயும், திடீரென அவை தரப்படுவது நிறுத்தப்பட்டதாயும், அதுவே தகராறுகளுக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

தொழிலாளர்கள், சாதாரணமாக வேட்டி உடுத்திக்கொண்டு வேலைக்குச் சென்றனராம்.

அநீதி ஒழிய! ஆணவம் அழிய!

சென்னையில் அண்ணா முழக்கம்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"அறிவு புகட்டினால் ஆத்திரப்படுகிறார்கள்; மனுச் செய்தால் மமதையோடு பேசுகிறார்கள்; ஜனநாயக வழிகளில் எடுத்துக் கூறினால், பட்டாளத்தைக் காட்டுகிறார்கள்; இந்த நிலையில், மக்கள், ஜனநாயக வழிகளில் எடுத்துச் சொல்லுவவைகளை சர்க்கார் மதிக்காவிட்டால், அதற்கு அடுத்த கட்டம் பலாத்காரம்தான்; பலாத்காரத்தில் ஈடுபடுமாறு யாரும் மக்களை தூண்டமாட்டார்கள்; மக்கள் தாங்களாகவேதான் ஈடுபடுவார்கள்; எங்களை எல்லாம் பிடித்துச் சிறைக்குள் போட்டுவிட்டால், நாங்கள் என்ன செய்யமுடியும்? அரசியல் என்ன, 'சதாரம்' நாடகமா? நூலேணி வைத்து, சிறைக் கூடத்திலிருந்து மதிலேறிக் குதித்தா, நாங்கள் வெளிவருவோம்? சிறைக்குள் சிந்தை நொந்து வாடி வதங்குவதைத் தவிர, வேறு வழி ஏது?

"நாகர்கள் தங்கள் கோரிக்கையான காரண காரியங்களை விளக்கிக் கூறினார்கள்; மனுப்போட்டார்கள்; மாநாடு கூட்டி எடுத்துச்சொன்னார்கள்; ஆனால், அவை எல்லாம் பலன் தரவில்லை என்ற நிலை ஏற்பட்ட பின்னர்தான், பலாத்காரமான வழிகளை அவர்களிலே சிலர் மேற்கொள்ள முயற்சிக்கிறார்கள்.

"அத்தகைய நிலை தமிழகத்தில் ஏற்பட வேண்டுமென்று நேரு சர்க்கார் விரும்பினால், போலிசை ஏவட்டும்; இராணுவத்தைக் கூப்பிடட்டும்; அவர்களுக்குப் பலாத்காரம் தான் பிடிக்கும் என்றால் தாராளமாகச் செய்யட்டும்.

"இந்தியாவிற்குச் சுதந்திரம் வேண்டுமென திலகரும், காந்தியாரும், மோதிலால் நேருவும் எடுத்துக்கூறினார்கள்; வெள்ளையர்கள், அலட்சியம் செய்தார்கள். உடனே வங்கத்திலும், பஞ்சாபிலுமிருந்த வாலிபர்கள் ஒன்று கூடினார்கள்; 'நம்முடைய தலைவர்கள் அவமதிக்கப்படுகிறார்கள்; அவர்களின் கோரிக்கைகள் அலட்சியம் செய்யப்படுகின்றன; நம்முடைய நாட்டிற்குச் சுதந்திரம் வேண்டும்; இதற்கு வாதமென்ன தேவை? என்றாலும், ஊமைக்கும் புரியும் வாதங்களைக் கூறியிருக்கிறார்—சட்ட நுணுக்கமறிந்த மோதிலால்; சட்ட ரீதியான வாதங்களைத் தந்திருக்கிறார்; என்றாலும், வெள்ளையர் மமதையோடிருக்கின்றனர்; எனவே, நாம வெள்ளையர்களை.........!' என்றான், பகவத்சிங்! 'கொன்று குவிப்போம்' என்றான் சுகதேவ்; 'எப்போது?' என்றான் பகத்சிங்; 'இப்போதே' என்றான் மூன்றாமவன்; இப்படி இரகசியமாகப் பேசிய வீர இளைஞர்கள், வெள்ளையரால் பின்னால் தூக்கிலிடப்பட்டார்கள்; உண்மைதான்; ஆனால், பகத்சிங்குகள் தோன்றிய பிறகு வெள்ளையர், 'இனி நமது ஆதிக்கம் நீடிப்பது கடினம்' என்று உணரத் தலைப்பட்டனர்.

"எனவே, நேருவுக்கு, தமிழகத்திலிருந்து பகத்சிங் வேண்டுமா? ம. பொ. சி. வேண்டுமா? 'ம. பொ. சி. வேண்டுமா?' என்று சொல்வதற்குக் காரணம், இன்னும், 'என தலைவர், நேரு' என்று 'காதல்' கொண்டிருக்கிறார், ம. பொ. சி. — ...தினாலேதான், 'அப்படிப்பட்ட ம. பொ. சி. வேண்டுமா? பகத்சிங் வேண்டுமா?'—என்று கேட்கிறோம்.

"எனவே, நேரு அனுமதிக்கிற வரையில் நமது பாதை அமைதியானதுதான்; 'பலாத்காரம கூடாது' என்பதற்குத் தான் இத்தனை பாடுபடுகிறோம்; கட்டுத் திட்டங்களை மக்களுக்கு விதிக்கிறோம்.

"ஆனால், சர்க்கார், கூட்டணியினரின் ஜனநாயக வழியைப் புரிந்துகொள்ளாவிட்டால் — அவர்களது நியாயமான கோரிக்கைகளை அலட்சியம் செய்துவிட்டு கொடிய அடக்குமுறையில் இறங்கினால் நாட்டில் பலாத்காரம் மலர்வதற்கு வழிகோலுவதாகும்.

"நாங்கள், பலாத்காரம் கூடாது என்று மக்களிடத்தில் இப்படிப் பேசி விளக்கம் தந்துகொண்டிருப்பதைப் பார்த்து ரசிக்காவிட்டாலும், சும்மாவாவது இருக்கலாம்; ஆனால் அமிர்தசரசிலே கூடி, ஆணவத்தோடு, 'பட்டாளத்தை ஏவுவேன்; போலீசைப் பாயச் சொல்லுவேன்' என்றால், என்ன சொல்வது நாம்?

"'நேரு, ஆத்திரத்தாலே அப்படிப் பேசுகிறார்' என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

"அவருக்கும்—அவரது சர்க்காருக்கும் ஆத்திரம் அதிகமாக அதிகமாக, நமக்கு அமைதியிலே அதிகமான நாட்டம் பிறக்க வேண்டும்; நாம் அமைதியாகவே, அணுவளவேனும் பலாத்காரமின்றி, பிப். 20-ல் பொது வேலைநிறுத்தம் செய்ய வேண்டும் என்று கூற விரும்புகிறேன்."

—என்று அண்ணா அவர்கள், 10-2-56 அன்று, சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டார். அவரது சொற்பொழிவின் பிற்பகுதி தொடர்ந்து வெளிவரும்.

விசாலாந்திரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கர்நாடக—ஆந்திர இணைப்பு ஏற்படுத்தப்படுமானால் தனித்திருக்கும் கோரிக்கையை தெலிங்கானா காங்கிரஸ் தலைவர்கள் விட்டுவிடத் தயாராக உள்ளனர்.

ஆந்திர—கர்நாடகக் கூட்டைக் காட்டிலும், கேரள—கர்நாடக இணைப்பை உருவாக்கலாமா என்று ஆலோசிக்கப்பட்டுவருகிறதாம்.

பஞ்சாப் மாகாணத்தை இருமொழி மாகாணமாகவே உருவாக்கி, அங்கு வழங்கப்படும் மொழிகளுக்கும் எழுத்துகளுக்கும் போதுமான பாதுகாப்பு அளிப்பது என்றும் யோசிக்கப்படுகிறதாம்.

விக்டோரியா மாணவர் விடுதி நிறைவு விழா

16—2—56 அன்று மாலை 5 மணிக்கு, சென்னை—திருவல்லிக்கேணி விக்டோரியா மாணவர் விடுதி 'தமிழ் மன்றத்'தின் 'நிறைவு விழா'வில், பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

தேவிகுளம்-பீர்மேடு: தி.மு.க.விளக்கம்

போடிநாயக்கனூர்:

தொண்டன் பழனியாண்டி திடல்
(சந்தைத் திடல்)
17—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
ஏ. மா. பெரியசாமி

பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். முத்து

★

கரூர்:

ஏ. வி. எஸ். மைதானத்தில்
(ஈசுவரன் கோயில் வடபுறம்)
16—2—56 மாலை 7 மணிக்கு

தலைவர்:
பி. சோமு

பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். நெடுமாறன்

தேவிகுளம்-பீர்மேடு பற்றி தி. மு. க. விளக்கம்

16—2—56 வியாழன் மாலை 6 மணிக்கு

சென்னை-அண்ணாபிள்ளைத் தெருவில்

(கொத்தவால்சாவடி அருகில்)

தலைவர்:

தி. ம. பாலகிருட்டிணன்

பேசுவோர்:

மு. கருணாநிதி
பி. ஆர். கோகுலகிருட்டிணன்
முகவை - ஆர். எஸ். பாண்டியன்
கோ. செங்குட்டுவன்

—14-வது வட்ட தி. மு. கழகம்

பிப்ரவரி 20-ந் தேதி திங்கட்கிழமை
பொது வேலைநிறுத்தம் (ஹர்த்தால்)

1. தட்சிணப் பிரதேசம் அமைப்பதென்ற கருத்தை அறவே கைவிட்டு மொழிவழி இராஜ்யம் அமைக்கப்பட வேண்டும்.
2. தமிழக எல்லையோரத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளை தமிழகத்தோடு சேர்க்கவும், பிற மொழிப் பகுதிகளை அதனதன் மொழி வழங்கும் இராஜ்யங்களோடு சேர்க்கவும் ஒரு எல்லைக் கமிஷன் நியமித்து ஜனநாயக வழியில் முடிவு செய்ய வேண்டும்.
3. 'சென்னை இராஜ்யம்' என்ற பெயர், 'தமிழ் நாடு' என்று மாற்றப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளின் பின்னால் தமிழர்கள் ஒருமனதோடு ஒற்றுமையாக நின்று வற்புறுத்துகிறார்கள் என்பதை இந்திய அரசினருக்கும், சென்னை அரசினருக்கும் உணர்த்தும் அறிகுறியாக, பிப்ரவரி 20-ம் நாள் திங்கட்கிழமையன்று பொது வேலை நிறுத்தமும் கடையடைப்பும் (ஹர்த்தால்) நடத்த வேண்டும் என்று சர்வகட்சிக் கூட்டணியால் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

எனவே,

தொழிலாளர்களே!	தொழிலதிபர்களே!
ஆசிரியர்களே!	மாணவர்களே!
பணிகள் புரிவோரே!	பத்திரிகையாளர்களே!
அலுவலகம் நடத்துவோரே!	அலுவல்கள் செய்வோரே!
வர்த்தகர்களே!	வண்டிகள் ஓட்டுவோரே!
நாடகம் ஆடுவோரே!	சினிமா நடத்துவோரே!
ஓட்டல்காரர்களே!	நடிகர்களே!

மற்றுமுள்ளவர்களே, நீங்கள் அனைவரும்

பொது வேலைநிறுத்தத்தை
(ஹர்த்தாலை)
பிப்ரவரி 20-ம் நாள் திங்களன்று

வெற்றிகரமாகவும்—சிறப்பாகவும்

அமைதியான முறையில்
பலாத்காரம் தலைகாட்டாமல்
சேதம் விளைவிக்காமல்
யாரையும் துன்புறுத்தாமல்

கட்டுப்பாடுடனும் கண்ணியத்துடனும் நடத்திக்காட்டி தமிழரின் உரிமையையும் தன்மானத்தையும் நிலைநாட்டும்படி

உங்களைப் பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

பி. டி. ராஜன் (நீதிக் கட்சி)	கே. விநாயகம் (வடக்கெல்லை - பாதுகாப்புக் குழு)
கே. சி. சுப்பிரமணியம் ,,	சித்தூர் சீனிவாசன் ,,
சி. என். அண்ணாதுரை (தி. மு. க.)	ஏ. ரத்தினம் (தாழ்த்தப்பட்டோர் -
இரா. நெடுஞ்செழியன் ,,	எம். சுந்தரராஜ் ,, பெடரேஷன்)
என். வி. நடராசன் ,,	கவிஞர் பாரதிதாசன் (புதுவை - மக்கள் முன்னணி)
ம. பொ. சிவஞானம் (தமிழரசுக் -	வி. சுப்பையா ,,
சின்ன அண்ணாமலை ,, கழகம்)	எஸ். சுயம்பிரகாசம் (பார்லி. - மெண்டரி கட்சி)
ஜி. உமாபதி ,,	எம். பி. சுப்பிரமணியம் ,,
ப. ஜீவானந்தம் (கம்யூனிஸ்டு கட்சி)	வி. வி. இராமசாமி ,,
மணலி கந்தசாமி ,,	நாரண துரைக்கண்ணன் (எழுத்தாளர் சங்கம்)
ஏ. எஸ். கே. அய்யங்கார் ,,	டி. கே. சண்முகம் (நடிகர் சங்கம்)
எஸ். சி. சி. அந்தோனி பிள்ளை - (சோஷலிஸ்டு)	எ. கஜபதி நாயகர் (தமிழர் சேவை)
எம். சின்னசாமி ,,	பிளச்சர் (இணைப்புக் கமிட்டி)
பி. எஸ். சின்னதுரை (பிரஜா - சோஷலிஸ்ட்)	
எ. சுப்பிரமணியம் ,,	

—சர்வ கட்சி கூட்டணி

வடாற்காட்டிற்கு பொதுச்செயலாளர்

வருகை

பிப்ரவரி 20-ந் தேதி 'பொது வேலைநிறுத்தம்' குறித்து விளக்கந்தருவதற்கும் மக்கள் ஆதரவைத் திரட்டக் கழகத் தோழர்களை ஊக்குவிப்பதற்கும் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், கண்ணதாசன், முல்லை-சத்தி ஆகியவர்களுடன் 17-2-56 அன்று வட ஆற்காடு வருகிறார்.

பின்கண்டபடி பலவூர் இயக்கத் தோழர்களையும் குறிப்பிடுவன இடங்களில் சந்திப்பார்:—

திருப்பத்தூர்: காலை 9—தோழர் க. நெடுஞ்சோழன் அவர்கள் இல்லம்;
வாணியம்பாடி: காலை 10-15—தோழர் முல்லை-வடிவேல் அவர்கள் இல்லம்;
ஆம்பூர்: காலை 11—தி மு கழக அலுவலகம்;
குடியேற்றம்: பகல் 12-15—கழக அலுவலகம்;
வேலூர்: பகல் 1-30 — டவுன் ஹால்;
ஆற்காடு: மாலை 4—ரத்னகேப்;
இராணிப்பேட்டை: மாலை 4-30—லேபர் யூனியன் அலுவலகம்;
வாலாஜா: மாலை 5;
காவேரிப்பாக்கம்: மாலை 5-30

குறிப்பு: செங்கம், திருவண்ணாமலை, போளூர், செய்யாறு, ஆரணி, வந்தவாசி தாலுகாவைச் சேர்ந்த கழகச் செயலாளர்களும், தோழர்களும் மேலகுறித்துள்ள ஏதாவது ஒரு ஊரில் பொதுச்செயலாளர் அவர்களைச் சந்திக்கும்படி வட ஆற்காடு மாவட்டச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி வேண்டிக்கொள்கிறார்.

கே. ஏ. மதியழகன்

சுற்றுப்பயணம்

பிப். 17: குடியேற்றம்
18: திருவத்திபுரம்
19: வேலூர்
22: பட்டிவீரன்பட்டி

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அமுதா அச்சகத்தால் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம். ஏ.

பிப்ரவரி 20-ல் பொது வேலைநிறுத்தம்!